RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 158 | ஜூன்.13, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பச்சைத் துண்டு அணிந்தால் போலி விவசாயியா? பிஆர்.பாண்டியன் கொந்தளிப்பு



திருவாரூர்: ஜூன்.13-

தமிழக முதல்வர் ஸ்டாலின், நேற்று ஈரோட்டில் நடைபெற்ற விழாவில் பேசும்போது, "நாங்கள் ஒன்றும் பச்சைத் துண்டு போட்ட போலி விவசாயிகள் அல்ல" என்று கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள தமிழக காவிரி விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பிஆர். பாண்டியன், "பச்சைத் துண்டுபோட்ட போலி விவசாயி யார்?" "பச்சைத் துண்டுபோட்டால் போலி விவசாயியா?" எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக மன்னார்குடியில் நேற்று (ஜூன் 12) செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது. "முதல்வர் ஸ்டாலின், மத்திய அரசின் ஆத்மா திட்டத்தின் நிதியை பயன்படுத்தி, ஈரோட்டில் விவசாயிகள் கருத்தரங்கம், கண்காட்சி என்கிற பெயரில் போலி நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். பாதிக்கப்படும் விவசாயிகளுக்காக குரல் கொடுக்கும் பச்சைத்துண்டு விவசாயிகள் மீது புழுதி வாரி தூற்றியுள்ளார். இது கண்டிக்கத்தக்கது. முதல்வர் ஸ்டாலின் ஆட்சியின் அலங்கோலத்தால் விவசாயிகள் படும் துன்பங்களை பட்டியலிட்டு வெளி உலகுக்கு எடுத்துரைத்தால் போலி பட்டம் கொடுக்க முயற்சிப்பீர்களா?

உங்கள் பட்டம் எங்களுக்கு தேவையில்லை. விவசாயிகளுக்கு தனது ஆட்சிகாலத்தில் செய்துள்ளதாக ஈரோட்டில் பட்டியலை வாசித்துள்ள ஸ்டாலின், 2021க்கு முந்தைய ஆட்சியில் காவிரி டெல்டாவில் பேரிடரால் ஏற்பட்ட மகசூல் இழப்புக்கு விவசாயிகள் பெற்ற தொகை பட்டியலையும், அப்போது வழங்கப்பட்ட இடுபொருட்கள் பட்டியலையும் தங்கள் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட இழப்பீட்டுக்கான பட்டியலையும் ஒப்பிட்டு வெளியிட தயாரா?.

2021 முதல் குறுவை காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தாமல் கைவிட்டுள்ளீர்கள். பயிர் காப்பீட்டு பிரீமியத்தை தனியார் காப்பீட்டு நிறுவனத்துடன் கூட்டுசேர்ந்து வசூலிக்க வைக்கும் வேகத்தை, உரிய இழப்பீடு பெற்று தருவதற்கு தங்களது ஆட்சி காட்டவில்லை. விவசாயிகளின் நெல்லை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற திட்டத்தை இந்தியாவிலலேயே முதன் முதலில் கொண்டுவந்தவர் கருணாநிதி, ஆனால் அந்த கொள்முதலை தனியாருக்கு தாரை வார்த்து விவசாயிக்கு மட்டுமல்ல கருணாநிதிக்கே துரோகம் செய்துள்ளீர்கள்.

அந்த தனியாருக்கோ எந்தவொரு முன் அனுபவமோ, கொள்முதலுக்கான கட்டமைப்போ அதற்கான வங்கி பணி பரிவர்த்தனைக்கான தகுதியோ இல்லை. இதன்காரணமாக செங்கல்பட்டு, ராணிப்பேட்டை திருவண்ணாமலை, திருநெல்வேலி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் ரூ.800 கோடி அளவில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு உரிய விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படவில்லை. இதற்காக விவசாயிகள் வீதியில் இறங்கி போராடுகின்றனர். இதற்கு முதல்வர் ஸ்டாலின் ஆறுதல் சொல்லவில்லை.

தனியார் கொள்முதல் குறித்த கணக்கு விபரங்கள் கூட இல்லாமல், தங்களது மாவட்டங்களில் தனியார் நெல்கொள்முதலை அனுமதித்த மாவட்ட ஆட்சியர்கள் பரிதவிக்கிறார்கள். விவசாயிகள் பணம் வரவாகமல் தற்கொலை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்கெல்லாம் தீர்வு சொல்லவில்லை. இந்த நிலையில்தான், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆதரவாக கொள்முதல் செய்த நெல்லுக்கு தமிழக அரசு பொறுப்பேற்று உடனடியாக உரிய தொகையை விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

தனியார் கொள்முதலை ரத்து செய்து அரசே பொறுப்பேற்று கொள்முதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியது பச்சைத்துண்டு அணிந்த விவசாயிகள்தான். வரும் ஜூன் 17ம் தேதி தலைமைச் செயலகத்தை முற்றுகையிட உள்ளோம். இதுபோன்று விவசாய விரோத கொள்கைகளை அரசியலுக்கு அப்பாற்பட்டு தீர்வு காண்பதற்காக போராடும் விவசாயிகளை பச்சைத் துண்டு போட்ட போலி விவசாயிகள் என்று முதல்வர் கொச்சைப்படுத்துவது கண்டிக்கத்தக்கது," என்று அவர் கூறியுள்ளார்.

## மானாமதுரை அரசு மருத்துவமனையில் காலாவதியான மாத்திரை கொடுக்கப்பட்டதால் நோயாளி வயிற்று வலியால் அவதி




மானாமதுரை, ஜூன். 13

மானாமதுரை அரசு மருத்துவமனையில் வயிற்றுவலி சிகிச்சைக்காக வந்தவருக்கு காலாவதியான மாத்திரை கொடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது மேலும் அந்த மாத்திரையை உண்ட நோயாளிக்கு மேலும் வயிற்று வலி அதிகமானதாக கூறப்படுகிறது காலாவதியான மாத்திரை கொடுக்கப்பட்ட சம்பவம் மானாமதுரை பகுதியில் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு தினமும் 500க்கும் மேற்பட்டோர் புறநோயாளிகளாக வந்து செல்கின்றனர். உள்நோயாளிகளாக 30க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெறுகின்றனர் இந்த நிலையில் நேற்று முன்தினம் வயிற்று வலியாக மிளகனுர் கிராமத்தை சேர்ந்த ஒரு நபர் சிகிச்சைக்காக வந்துள்ளார் சிகிச்சை பார்க்கப்பட்டு அவருக்கு மாத்திரை வழங்கப்பட்டுள்ளது மாத்திரையை அங்கே கவனிக்காத அவர் வீட்டில் சென்று அந்த மாத்திரையை சாப்பிட்ட பிறகு அதன் அட்டையை பார்த்து உள்ளார் அதன் அட்டையில் M/D 06/2023 to E/D 05/2025

வரை செல்லுபடி ஆகும் என பதிவிட்டு இருந்தது இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த நோயாளி மேலும் வயிற்று வலி அதிகமானதாக கூறப்படுகிறது இந்த நிலையில் மருத்துவமனை சார்பில் கேட்ட போது கேட்டபோது சம்பந்தப்பட்ட நோயாளி மாத்திரையை கொண்டு வரச் சொல்லுங்கள் என்றும் மாத்திரை தவறாக கொடுக்கப்பட்டிருந்தால் மாத்திரை கொடுத்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது..

## யுபிஎஸ்சி முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து




யுபிஎஸ்சி முதனிலைத் தேர்வு முடிவுகளில் இதுவரை இல்லாத

சென்னை: ஜூன்.13-

"யுபிஎஸ்சி முதனிலைத் தேர்வு முடிவுகளில் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர். முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்விலும் அடுத்து நீங்கள் முத்திரை பதிக்க வாழ்த்துகிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில், "தமிழக அரசின் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியிலும் "நான் முதல்வன்" திட்டத்திலும் பயின்ற நம் மாணவர்கள் எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர்.

முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்விலும் அடுத்து நீங்கள் முத்திரை பதிக்க வாழ்த்துகிறேன். உங்கள் வெற்றிமுகங்களை நேரில் காண ஆவலாய் இருக்கிறேன்.

இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் பயிற்றுநர்களுக்கும் என் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன். தமிழ்க்கொடி உயர உயரப் பறக்கட்டும்," என்று முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## அகமதாபாத் விமான விபத்து: உயிரிழப்புகள் முதல் போயிங் நிறுவன விளக்கம் வரை

குஜராத், ஜூன்.13-

குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து 242 பேருடன் புறப்பட்ட சில நிமிடங்களில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. அதில் பயணித்தவர்களில் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 30க்கும் மேற்பட்டோர் பலத்த தீ காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். சமீப காலத்தில் நடந்த மிகப் பெரிய கோர விபத்து இது.

வேகமாக வளர்ந்து வரும் அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வியாழக்கிழமை மதியம் 1.38 மணிக்கு புறப்பட்டது ஏர் இந்தியாவின் 171 என்ற போயிங் ரக விமானம். கேப்டன் சுமித் சபர்வால், துணை விமானி கிளைவ் குந்தர் ஆகியோர் விமானத்தை இயக்கினர். போயிங் 7878 ட்ரீம்லைனர் எனும் இந்த விமானத்தில் 230 பயணிகள், 12 பணியாளர்கள் என 242 பேர் பயணித்தனர். இவர்களில் 169 பேர் இந்தியர்கள். 53 பேர் பிரிட்டன் நாட்டையும், 7 பேர் போர்ச்சுகீஸ் நாட்டையும், ஒருவர் கனடாவையும் சேர்ந்தவர்கள்.

விமானம் சரியாக 1.38 மணிக்கு விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டதாகவும், புறப்பட்ட 5 நிமிடங்களில் விபத்துக்குள்ளானதாகவும் ஏர் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான விமானத்தின் முன்பகுதி, அகமதாபாத் மேகனிநகர் பகுதியில் பிஜே மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மாணவர்கள் விடுதியின் கூரையின் மீது விழுந்தது.

பயங்கர வெடிச்சத்தத்துடன் விமானம் விழுந்ததை அடுத்து, தீ மளமளவென்று பற்றி எரிந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். பல மீட்டர் தொலைவுக்கு கரும்புகை வெளியேறியது. இந்த விமானம் அகமதாபாத்தில் இருந்து ஒன்பதரை மணி நேரம் பயணித்து லண்டன் செல்லக்கூடியது என்பதால், விமானத்தில் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்டிருக்கும் என்று கூறப்படுகிறது.

மீட்பு பணிகள்: விமானம் விபத்துக்குள்ளான தகவல் கிடைத்ததும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், காவல் துறையினர், தீ அணைப்புத் துறையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தீ அணைப்பு வாகனங்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 204 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், 41 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அகமதாபாத் மாநகர காவல் ஆணையர் ஜி.எஸ். மாலிக் தெரிவித்துள்ளார். எனினும், உயிரிழப்பு தொடர்பாக ஏர் இந்தியா இன்னும் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை. காயமடைந்தவர்களில் பெரும்பாலானோரும் விமானம் விழுந்த மருத்துவக் கல்லூரி விடுதியில் இருந்தவர்கள் எனத் தெரிகிறது.

குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி மரணம்: அகமதாபாத் விமான விபத்தில் குஜராத் மாநில முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்த தகவலை மத்திய அமைச்சர் சி.ஆர் பாட்டீல் உறுதி செய்துள்ளார். தனது மகளை சந்திக்க அவர் இன்று மதியம் லண்டன் புறப்பட்டதாக தகவல். பிசினஸ் கிளாஸ் பிரிவில் அவர் விமானத்தில் பயணித்தார்.

உயிரி பிழைத்த ஒருவர் இந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார். பயணி ஒருவர் உயிர் பிழைத்ததை அகமதாபாத் போலீஸ் கமிஷனர் ஜி.எஸ். மாலிக் உறுதி செய்துள்ளார். "11ஏ இருக்கையில் பயணித்த பயணி ஒருவரை போலீஸார் உயிரோடு இருப்பதை அடையாளம் கண்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. குடியிருப்பு பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்" என அவர் தெரிவித்தார். 11ஏ இருக்கையில் பயணித்த பயணியின் பெயர் ரமேஷ் விஷ்வகுமார் என்றும், அவருக்கு வயது 38 என்றும் தகவல் வெளியாகி உள்ளது

ஏர் இந்தியா வெளியிட்ட தகவல்: விபத்து குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் முதலில் உறுதிப்படுத்திய ஏர் இந்தியா, பின்னர், விபத்தில் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை எத்தனை பேர் இருந்தார்கள் என்பது பற்றி விவரத்தையும், உறவினர்கள் தொடர்புகொள்ள வேண்டிய உள்நாட்டு ஹட்லைன் எண் 1800 5691 444யும், வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்வதற்கு +91 8062779200 என்ற மொபைல் எண்ணையும் வெளியிட்டது.

மாநில அரசு மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறையை திறந்து, தொடர்பு எண்களை அறிவித்தது. லேண்ட்லைன்: 07923251900, மொபைல்: 99784 05304, காவல் துறை உதவி எண்: 07925620359 ஆகிய எண்கள் அறிவிக்கப்பட்டன.

அறிவுறுத்தல் வழங்கிய பிரதமர்: விபத்து குறித்து அறிந்த பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு ஆகியோரைத் தொடர்பு கொண்டு கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொண்டதோடு, இருவரையும் உடனடியாக அகமதாபாத் விரையுமாறு கேட்டுக்கொண்டார். பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் விரைவாக கிடைப்பதை உறுதிப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

விபத்து குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அகமதாபாத்தில் நடந்த துயரச் சம்பவம் எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு இதயத்தை உடைத்துள்ளது. இந்த சோகமான நேரத்தில், பாதிக்கப்பட்ட அனைவருடனும் எனது எண்ணங்கள் உள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகப் பணியாற்றும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அகமதாபாத்தில் நடந்த துயரமான விமான விபத்தால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு வேதனை அடைந்துள்ளேன். விபத்து நடந்த இடத்திற்கு பேரிடர் மீட்புப் படையினர் விரைந்துள்ளனர். நிலைமையை மதிப்பிடுவதற்காக குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி மற்றும் அகமதாபாத் காவல் ஆணையர் ஆகியோருடன் பேசினேன்" என தெரிவித்தார்.

குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அகமதாபாத்தில் ஏர் இந்தியா பயணிகள் விமான விபத்து குறித்து நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன். விபத்தில் உடனடி மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், காயமடைந்த பயணிகளுக்கு உடனடி சிகிச்சைக்கான ஏற்பாடுகளை போர்க்கால அடிப்படையில் செய்யவும் அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

காயமடைந்த பயணிகளை சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல ஒரு பசுமை வழித்தடத்தை ஏற்பாடு செய்யவும், மருத்துவமனையில் அனைத்து சிகிச்சை ஏற்பாடுகளையும் முன்னுரிமை அடிப்படையில் உறுதி செய்யவும் நான் அறிவுறுத்தியுள்ளேன். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா என்னிடம் பேசினார். இந்த விமான விபத்தில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு தேசிய பேரிடர் மீட்புப் படை குழுக்கள் மற்றும் மத்திய அரசின் முழு ஆதரவையும் உறுதி செய்தார்" என குறிப்பிட்டிருந்தார்.

சம்பவ இடத்தில் அமைச்சர் ஆய்வு: அகமதாபாத் விரைந்த சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு, சம்பவ இடத்துக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "துயரமான மற்றும் கொடூரமான இந்த சம்பவத்தால் நான் முற்றிலும் அதிர்ச்சியடைந்துள்ளேன். நான் இன்னமும் அதிர்ச்சியில் இருக்கிறேன். பிரதமர் என்னை அழைத்து சம்பவ இடத்தில் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்த நேரத்தில், பயணிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரைப் பற்றி மட்டுமே என்னால் நினைக்க முடிகிறது.

பல நிறுவனங்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. எவ்வளவு பேர் இறந்தார்கள் என்பது குறித்து நான் இப்போதைக்கு எதுவும் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறோம். மத்திய உள்துறை அமைச்சரும் இங்கு சம்பவ இடத்திற்கு வருகிறார். (பாஜக தலைவர்) விஜய் ரூபானியும் விமானத்தில் இருந்தார் என்பதை அறிந்து மிகவும் வருத்தமாக இருக்கிறது. மற்ற நாட்டவர்களும் அதில் இருந்தனர். நாங்கள் நியாயமான மற்றும் முழுமையான விசாரணையை மேற்கொள்ளப் போகிறோம். இந்த சம்பவம் ஏன் நடந்தது என்பதன் அடி ஆழம் வரை செல்வோம்" என தெரிவித்தார்.

தற்காலிகமாக நிறுத்தப்பட்ட விமான நிலைய செயல்பாடு: இந்த விபத்தை அடுத்து, அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தின் (எஸ்.வி.பி.ஐ.ஏ) செயல்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை சரிபார்ப்புகளை அடுத்து விமான நிலையம் வழக்கம்போல் செயல்படத் தொடங்கியது.

இந்த விபத்து குறித்து ஏர் இந்தியா தலைவர் என் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அகமதாபாத்தில் இருந்து லண்டன் கேட்விக் செல்ல வேண்டிய ஏர் இந்தியா விமானம் 171, இன்று ஒரு துயர விபத்தில் சிக்கியதை ஆழ்ந்த துக்கத்துடன் உறுதிப்படுத்துகிறேன். இந்தப் பேரழிவு தரும் நிகழ்வால் பாதிக்கப்பட்ட அனைவரின் குடும்பத்தினர் மற்றும் அன்புக்குரியவர்களுடன் எங்கள் எண்ணங்களும் ஆழ்ந்த இரங்கல்களும் உள்ளன.

இந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆதரிப்பதே எங்கள் முதன்மை கவனம். சம்பவ இடத்தில் அவசரகால மீட்புக் குழுக்களுக்கு உதவவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் பராமரிப்பையும் வழங்கவும் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். மேலும் சரிபார்க்கப்பட்ட தகவல்கள் எங்களுக்குக் கிடைக்கும்போது மேலும் புதுப்பிப்புகள் பகிரப்படும். அவசர மையம் செயல்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தகவல் தேடும் குடும்பங்களுக்கு ஆதரவு குழு அமைக்கப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

போயிங் நிறுவனம் விளக்கம்: இந்த விபத்து குறித்து போயிங் வெளியிட்ட அறிக்கையில், "ஆரம்பகட்ட அறிக்கைகள் கிடைத்துள்ளன. மேலும், தகவல்களை சேகரிக்க தொடர்ந்து ஏர் இந்தியா நிறுவனத்துடன் தொடர்பில் உள்ளோம்" என்று தெரிவித்துள்ளது. இதனிடையே, பங்குச் சந்தையில் போயிங் நிறுவன பங்குகள் வெகுவாக சரிந்துள்ளன.

டாடா குழுமம் நிவாரண நிதி அறிவிப்பு: "ஏர் இந்தியா விமானம் விபத்தில் சிக்கியது மிகுந்த வேதனை அளிக்கிறது. எங்கள் துயரத்தை வெளிப்படுத்த எங்களிடம் வார்த்தைகள் இல்லை. தங்களது அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பங்கள், காயமடைந்தவர்கள் சார்ந்தே எங்களது எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் டாடா குழுமம் ரூ.1 கோடி வழங்கும். காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவுகளையும் நாங்கள் ஏற்கிறோம். அவர்களுக்கான சிகிச்சையை உறுதி செய்வோம். விபத்தில் சேதமடைந்த பி.ஜே மருத்துவக் கல்லூரி விடுதி கட்டிடத்தை புனரமைப்பதில் எங்களது பங்கு இருக்கும்" என்று டாடா குழுமம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று சிறப்பித்து,

# 703 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புக்களைச் சார்ந்த 843 உறுப்பினர்களுக்கு ரூ.72.24 கோடி மதிப்பீட்டிலான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்

சிவகங்கை, ஜூன்.13-


மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக நடத்தப்பட்ட, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பிற்கான ஆணைகள் வழங்கும் விழாவினை தொடர்ந்து, சிவகங்கை பகுதிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பங்கேற்று சிறப்பித்து, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் கடனுதவிக்கான ஆணைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில் வழங்கி தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய துணை கண்டத்தில் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்கின்ற வகையில், எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக கொண்டுள்ளதால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் தமிழகத்தினை பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக திகழ்கின்ற வகையில், தொலைநோக்கு சிந்தனையுடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதில் குறிப்பாக, ஆணுக்க பெண் சமம் என்ற நிலையை அனைத்திலும் ஏற்படுத்திடும் பொருட்டும், பெண்கள் பிறரை சார்ந்திராமல் தற்சார்பு நிலையை அடைந்திடும் பொருட்டு, பெண்களின் முன்னேற்றத்திற்கென கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு 1989ஆம் ஆண்டு, தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில் களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்க தொடங்கியது.




அவ்வாறாக, மகளிரின் முன்னேற்றத்திற்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு பார்வையில், துவங்கப்பட்ட இத்திட் டமானது, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் துவங்க வங்கி கடன் இணைப்புகளை ஏற்படுத்தி சுய உதவிக்குழு இயக்கத்தையும் வலுப்படுத்தி வருகிறது.

அதுமட்டுமன்றி, தற்போது நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சிறப்புக் குழுக்களும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, சுய உதவிக்குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மாநில நகர்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய மூன்று முக்கியத் திட்டங்களை மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகள், நகர்புற பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட வட்டாரங்களில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உழைப்பு மட்டுமன்றி, நாணயத்திலும் நற்சான்று பெற்றவர்களாக திகழ்ந்து வருகிறீர்கள். தங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கென மகளிர் திட்டத்தின் வாயிலாக பல்வேறு வகையான கடனுதவிகளை இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, மாண்புமிக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் கடனுத விகளை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் ஊரகம் மற்றும் நகர்புற பகுதிகளைச் சார்ந்த 703 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.67.54 கோடி மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பிற்கான ஆணைகளையும், 7 பகுதி கூட்டமைப்புகளுக்கு ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் பெருங்கடனுதவிக்கான ஆணைகளையும், 19 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.0.24 கோடி மதிப் பீட்டில் சமுதாய முதலீட்டு நிதிக்கான ஆணைகளையும், ரூ.0.14 கோடி மதிப்பீட்டில் 30 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு வட்டார வணிக வள மைய கடனுதவிக்கான ஆணைகளையும், 8 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.0.23 கோடி மதிப்பீட்டில் தனிநபர் தொழில் முனைவோர் கடனுதவிக்கான ஆணைகளையும்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 76 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.0.63 கோடி மதிப்பீட்டிலான NEFT கடனுத விக்கான ஆணைகளையும் என மொத்தம் 703 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புக்களைச் சார்ந்த மொத்தம் 843 உறுப்பினர்களுக்கு ரூ.72.24 கோடி மதிப்பீட்டிலான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் பல்வேறு வகையான கடனுதவிகளுக்கான ஆணைகள் இவ்விழாவின் மூலம் வழங்கப்படுகிறது.

அதில், குறிப்பாக கூட்டுறவுத் துறையின் வாயிலாக மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக 191 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு ரூ.19.25 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகள் வழங்கப்படுவது குறிப்பிடதக்கதாகும்.

இதுபோன்று அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்று தங்களின் வாழ்வாதாரத்தினை மேம்பாட்டிற்கு அடிப்படையாக இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மகளிர் சுய உதவிக்குழுக்களின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி என்.கவிதப்பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.இராஜேந்திர பிரசாத், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி உமா மகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.பிரவீன் குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.சேங்கைமாறன், மாவட்ட செயல் அலுவலர் (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) திரு.ஆதித்யா மேனன் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் திருமதி மரியா, திரு.சின்னதுரை, திரு.தேன்ராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




■ விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (12.06.2025) விருதுநகர் சரஸ்வதி அம்மாள் லயன்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் 35 பள்ளி மாணவர்களுடனான “Coffee With Collector' என்ற 204வது கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடி, பள்ளித் தேர்வு, உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் குறித்த உரிய வழிகாட்டுதல் வழங்கினார்.

## காட்டு பன்றிகள், மான்களால் ராமநாதபுரத்தில் 1.15 லட்சம் ஏக்கரில் விவசாயம் முற்றிலும் நிறுத்தம்

ராமநாதபுரம், ஜூன்.13-

ராமநாதபுரம் மாவட்டத்தில் காட்டுப்பன்றிகள், மான்களால் 1.15 லட்சம் ஏக்கர் புன்செய் நிலங்களில் முற்றிலும் விவசாய சாகுபடி நிறுத்தப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் 3.40 லட்சம் ஏக்கர் பரப்பில் நெல் விவசாயமும், 12 ஏக்கரில் சிறுதானியங்கள், 8 ஆயிரம் ஏக்கரில் பயறு வகைகள், 30 ஆயிரம் ஏக்கரில் மிளகாய், மல்லி, வெங்காயம், பருத்தி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் பயரிடப் படுகின்றன. இங்கு பருவ நிலைகளால் ஏற்படும் பாதிப்பு ஒருபுறம் என்றால், செய்த விவசாயத்தை மான்களும், காட்டுப்பன்றிகளும், காட்டு மாடுகளும் அழித்து நாசம் செய்கின்றன.



துகுறித்து காவிரி, வைகை, கிருதுமால், குண்டாறு இணைப்புக் கால்வாய் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் மலைச்சாமி கூறியதாவது: பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் தாலுகாக்களில் காட்டுப்பன்றிகள், மான்களால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வனத்துறையிடமும், மாவட்ட நிர்வாகத்திடமும் பல ஆண்டுகுளாக முறையிட்டும் நடவடிக்கை இல்லை. இதனால் 75 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்களில் நெல், பருத்தி, எள், சோளம், பயறு வைகைகள் மற்றும் 40 ஆயிரம் ஏக்கரில் கடலை சாகுபடி செய்வது கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்த நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியுள்ளன.

மேலும் கோடை காலத்தில் நன்செய், புன்செய் நிலங்களில் பயிரிடக்கூடிய பருத்தி, எள், உளுந்து உள்ளிட்ட பயறு வகைள் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காட்டு விலங்குகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் பருத்தி செடிகளை ஒடித்தும், காய்களை தின்றும் நாசம் செய்கிறது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு முதுகுளத்தூர் பகுதியில் கீழக்குளம், நல்லுக்குறிச்சி, பரமக்குடி பகுதியில் ஊரக்குடி, புதுக்குடி, வெங்காளூர், கமுதக்குடி உள்ளிட்ட கிராமங்களில் பருத்திச் செடிகளை காட்டுப்பன்றிகள் நாசம் செய்துள்ளதை விவசாயிகளுடன் சென்று பார்வையிட்டோம்.



இதேநிலை தொடர்ந்தால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெகுதூரம் சென்றுவிடுவர். தற்போதே தமிழகம் உணவு தானிய உற்பத்தில் பின்தங்கியுள்ளது. காட்டு விலங்குகளை கட்டுப்படுத்தவும், காட்டுப்பன்றிகளை சுடவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பாதிக்கப் பட்ட பயிர்களுக்கு சரியான இழப்பீடு வழங்க வேண்டும். கேரளாவில் விவசாயத்தை அழிக்கும் காட்டுப்பன்றிகளை சுட்டுக் கொல்ல உள்ளாட்சி நிர்வாகத்திடம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அங்கு உள்ளாட்சி நிர்வாகமே முன்னாள் ராணுவ வீரர்கள் மூலம் காட்டுப்பன்றிகளை சுட்டுக் கொல்கிறது.

தமிழகத்தில் இருந்து ஒரு ஐஏஎஸ் அதிகாரிகள் குழுவும் கேரளாவில் சென்று பார்வையிட்டு வந்தது. ஆனால் அக்குழு முறையான பரிந்துரைகளை அரசுக்கு வழங்காமல், காட்டுப் பன்றிகளை காட்டிலிருந்து 3 கி.மீ தூரத்தில் வந்தால் அதை பிடித்து காட்டில் விட வேண்டும் போன்ற பரிந்துரை களை வழங்கியுள்ளது. இது சாத்தியமில்லாதது. எனவே ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயம் முற்றிலும் அழிவதற்குள், விவசாயிகளையும், விவசாயத்தையும் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதுகுறித்த மாவட்ட வன அலுவலர் ஹேமலதாவிடம் கேட்டபோது, மாவட்டத்தில் மான்கள், காட்டுப்பன்றிகள் குறித்து கேமராக்கள் அமைத்தும், ட்ரோன்கள் மூலமும் கணக்கெடுப்பு நடத்தி வருகிறோம். காட்டுப்பன்றிகள் என்பதை உறுதி செய்ய 2 இடங்களில் இறந்த பன்றிகளின் மாதிரிகளை எடுத்து அதை உறுதி செய்ய, சென்னையில் உள்ள விலங்கு பரிசோதனை ஆய்வு மையத்துக்கு அனுப்பி உள்ளோம். பரிசோதனை முடிவு வந்த பின்பு தான் காட்டுப்பன்றியா என்பது உறுதி செய்யப்படும். சமீபத்தில் சிவகங்கை மாவட்டத்தில் இதேபோன்று மாதிரி எடுத்து சோதனை செய்ததில், அவை காடுகளில் திரியும் வளர்ப்பு பன்றிகள் என முடிவு வந்துள்ளது.

காட்டுப்பன்றிகளை சுடுவதற்கான அரசு உத்தரவு இன்னனும் வரவில்லை. வனவிலங்குகள் குறித்து முழுமையான கணக்கெடுப்பு நடத்திய பின்னும், ஆய்வு மூலம் காட்டுப்பன்றிதானா என்பதை உறுதி செய்த பின்பும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்தார்.





## குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு

காளையார் கோயில், ஜூன்.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்பட்டது. பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் முன்னிலை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்தக் கூடாது எனவும் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிக்க வேண்டும். தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தி அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழி கூற மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். ஆசிரியை வாசுகி நன்றி கூறினார்.

## சென்னை விமான நிலையத்திற்குள் மழை நீர் தேங்காமல் தடுக்க கால்வாய் கட்டும் பணியை தொடங்கியுள்ளது இந்திய விமான நிலைய ஆணையம்

சென்னை, ஜூன்.13-

சென்னை விமான நிலையத்திற்குள், விமான போக்குவரத்துக்கு இடையூறாக ஓடுபாதைகள் மற்றும் விமானங்கள் நிறுத்தும் இடங்களில், மழை நீர் தேங்காமல் தடுக்க விமான நிலைய வளாகத்திற்குள் 4.3 கி.மீ. நீளத்திற்கு புதிய மழைநீர் கால்வாய் கட்டும் பணியை இந்திய விமான நிலைய ஆணையம் தொடங்கியுள்ளது. இந்த கால்வாய் வழியாக மழைநீர் அடையாறு ஆற்றில் கலக்கும் விதத்தில், கால்வாய் அமைக்க ப்படுகிறது. சென்னை ஐஐடி நிபுணர்களின் ஆலோசனைகளின் பெயரில், இந்த மழைநீர் கால்வாய் அமைக்கப்படுவதாக, சென்னை விமான நிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.



## காணவில்லை

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சந்திப்பு நிலையத்தில் இருந்து காரைக்குடிக்கு பயணிகள் வண்டியில் அ.முகமது சமிஉல்லாஹ் என்பவர் கடந்த 9/6/2025 அன்று செல்லும் போது சர்டிபிகேட் அடங்கிய பேக் ரயிலில் தொலைந்து விட்டது ( சிவகங்கை ரயில் நிலையம் அருகில்) சர்டிபிகேட்டில் எனது முகவரியும் உள்ளது. யாரேனும் கண்டெடுத்தால் கீழ்க்கண்ட மொபைல் எண்ணுக்கு தெரிவிக்கவும்.

**Contact : 9345543288 / 9994456818**

பை விவரங்கள்: பள்ளி பை வகை

நிறம்: கருப்பு சாம்பல்

“”வார இறுதி” என்று முன் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.




# குடியாத்தம் கங்காதரசாமி நகராட்சி நடுநிலைப் பள்ளியை தரம் உயர்த்த கோரிக்கை

## கல்விக்கு கண் திறப்பாரா தமிழக முதல்வர்

வேலூர், ஜூன்.13-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வருகை புரிவதாக தெரிவித்திருந்த நிலையில் அவர் இந்த கங்காதர சாமி நடுநிலைப் பள்ளியை பார்வையிட்டு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லை யெனில் பொதும க்கள் சார்பாகவும், சமூக ஆர் வலர்கள் சார்பாகவும் ஆங்கா ங்கே கருப்பு கொடிகள் காட்டி போராட்ட ங்கள் நடைபெறும் என இப்பகுதி மக்கள் தெரி விப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்திவருகிறது.



■ மதுரை ஆலாத்தூர் பி.ஆர். மஹாலில் 1000 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதா மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் இறச்சகுளம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புக்கு மணிமேகலை விருது வழங்கியதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப.,அவர்களிடம் நேரில் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். உடன் மகளிர் திட்ட இயக்குநர் திரு.பத்ஹூ முகம்மது நசீர், உதவி திட்ட இயக்குநர் திருமதி.வளர்மதி ஆகியோர் உள்ளார்கள்.

# குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுக்கொண்டார்கள்

கன்னியாகுமரி, ஜூன்.13-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தொழிலாளர்துறை சார்பில் குழந்தை தொழிலாளர் முறை யினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, தலைமையில் அனைத்து த்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டு விழிப்புணர்வு வாகன பிரச்சாரத்தினை துவக்கி வைத்து தெரிவிக்கையில் .



2009 ஆம் வருடம் இலவச மற்றும் கட்டாயக்க ல்விக்கான குழந்தைகள் உரிமைச்சட்டத்தின் அடிப்படையில், 14 வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக்கல்வி அளிக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு 1986ம் வருட குழந்தை மற்றும் வளர் இளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்ப டுத்துதல்) சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இச்சட்டத்தின்கீழ் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எவ்வித பணியிலும் ஈடுபடுத்துவதும் 14 முதல் 18 வயதிற்குட்பட்ட வளர் இளம் பருவத்தினரை அபாயகரமான தொழில் களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தினை மீறுவோர்க ளுக்கு ரூ.20,000 முதல் ரூ.50,000/ வரை அபராத மாகவோ அல்லது 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனையாக வழங்கப்படும்.

இச்சட்டத்திற்கு புறம்பாக குழந்தைகளை அல்லது வளர் இளம் பருவத்தினரை பணிக்கு அமர்த்தும் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர் ஆகியோர்களுக்கும் தண்டனை வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளது. அதன்படி இரண்டாம் முறையாக இச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட குழந்தைத்தொழிலாளரின் பெற்றோர்களுக்கும் அல்லது பாதுகாவலருக்கும் ரூ.10,000/ வரை அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மாவட்டத்திலுள்ள கடைகள், வணிக நிறுவன ங்கள், பேக்கரி மற்றும் உணவு நிறுவனங்கள், திரையரங்குகள், மருத்துவ மனைகள், மோட்டார் போக் குவரத்து நிறுவனங்கள், பெட்ரோல் விற்பனை நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எவ்வித பணிகளில் அமர்த்துவதோ, வளர் இளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களி ல் ஈடுபடுத் துவதோ கூடாது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து தொழிலாளர்துறை சார்பில் குழந்தை தொழிலாளர் முறை யினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொ ண்டார்கள். மேலும் தொழிலா ளர்துறை சார்பில் குழந்தை தொழி லாளர் முறை யினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இப்பிரச்சார வாகனத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத் திலிருந்து வடசேரி பேருந்து நிலையம், இறச்சகுளம் சந்திப்பு, செண்பக ராமன்புதூர், ஆரல்வாய் மொழி, தோவாளை, செங்கல்சூளைகள் நிறைந்த பகுதிகளில் குழந்தை தொழிலாளர் முறை யினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ. பாலசுப்பிரமணியம், தொழிலாளர்துறை உதவி ஆணையர் திரு.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.கு.சுகிதா, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ராகுல்குமார், இ.ஆ.ப., ஊசூர் மேலாளர் திரு.சுப்பிரமணியம், தொழிலாளர்துறை ஆய்வா ளர்கள் திரு.ஆறுமுகம், திரு.மணிமுருகன், திரு.பாலசுப்பிரமணியம், திருமதி.அஸ்வினி, அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.






# வேலூர் பிடிஒ அலுவலகத்தில் சிறப்பு மருத்துவ முகாம்: பெண்களுக்கான மார்பகம் மற்றும் வாய் புற்றுநோய் கண்டறிதல் ஆகிய பொது மருத்துவம் உட்பட சிறப்பு மருத்துவ முகாம்

வேலூர், ஜூன்.13-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பி டி ஒ அலுவலகத்தில், பெண்களுக்கான மார்பகம் மற்றும் வாய் புற்றுநோய் கண்டறிதல் ஆகிய பொது மருத்துவம் உட்பட சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி உத்தரவின் பேரில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பூம்பூவை மற்றும் வின்சென்ட் ரமேஷ் பாபு தலைமையிலும், வேலூர் நகர மன்ற தலைவர் அமுதா ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார துறை சார்பில் தலைமை மருத்துவர். கார்த்திகேயன், பல் மருத்துவர். கலைச் செல்வன், மரு. இரா.பூஜா, பெண்களுக்கான மார்பகம் வாய் புற்றுநோய் அறிகுறி கண்டறிதல் மற்றும் பொது மருத்துவம் போன்றவற்றை இந்த சிறப்பு மருத்துவ முகாமில் மருத்துவம் பார்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் அரசு பணியாளர்கள் கலந்து கொண்டு இந்த சிறப்பு மருத்துவ முகாமை முறையாக பயன்படுத்தி கொண்டனர். இதில் பி.எச். எஸ். வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஜி.ரவி, பல் மருத்துவ உதவியாளர் இனியன், செவிலியர்கள் வெண்மதி கல்பனா திவ்யா சுதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவபுரிபட்டி கிராமத்தில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்

சிங்கம்புணரி, ஜூன். 13-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட சிவபுரிபட்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழக முதல்வர் தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக உருவெடுக்கும் பொருட்டு, எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறா ர்கள். அனைத்திலும் சீரான வளர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பு திட்ட செயல்பாடுகள் அமைந்துள்ளன. பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் தான் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு உதாரணமாக மகளிர்களின் மேம் பாட்டிற்கென முத்தமிழ றிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, சிறப்பான செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் சுய உதவிக்குழு திட்டமாகும்.

மேலும், விவசா யிகளின் நலன் காக்கின்ற வகையிலும், வேளாண் தொழிலை மேம்படுத்திடும் பொருட்டும், அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல், விவசாயிகள் பெற்றிருந்த கடனை தள்ளுபடி செய்தல் போன்ற திட்டங்களும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் நடைமுறை படுத்தப்பட்டுள்ளவைகள் ஆகும். அவ்வழியில், தமிழகத்தில் சிறப்பான ஆட்சியினை வழங்கி கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான தமிழக அரசு விவசாயிகளை பாதுகாத்து அவர்களின் நலன் காக்கின்ற அரசாக திகழ்ந்து வருகிறது.

அதில், கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவது மட்டுமன்றி, விவசாயப் பெருங்குடி மக்களின் உற்றத்தோழனாகவும், தொழில்ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மற்றும் அன்றாடக் குடும்பச் செலவிற்கும் உதவிகரமாக விளங்கி வரும் கால்நடைகளை பேணி பாதுகாப்பதற்கெனவும் பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மனிதர்களுக்கென செயல்படு த்தப்பட்டு வரும் பல்வேறு சுகாதார





திட்டங்களைப் போன்று, கால்நடைகளை பாதுகாப் பதற்கும், கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்கள், மருத்துவ உபகரணங்கள், 1962 என்ற நடமாடும் மருத்துவ ஊர்தி, காப்பீடு மற்றும் கால்நடை மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட திட்டங்களும் கால்நடைகளுக்கென செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதில், கால்நடைகளின் நலன் காக்கின்ற வகையில், வரும் முன் காப்போம் என்ற அடிப்படையில், மாவட்டம் முழுவதும் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் 202526 ஆம் ஆண்டிற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 12 முகாம்கள் வீதம், மாவட்டத்திலுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 144 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் துவக்கமாக, நேற்றைய தினம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவபுரிபட்டி கிராமத்தில் இம்முகாமானது தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதனைத்தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் கால்நடைகளுக்கு பயனுள்ள வகையில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமானது நடைபெறவுள்ளது.

கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு ஏதுவாக, தொலைதூர கிராமங்களை தேர்வு செய்து, அக்கிராமங்களில் கால்நடைகளுக்கான மருத்துவ வசதியினை அளித்திடும் நோக்குடன் இம்முகாம்களானது அரசால் நடத்தப்படுகிறது.

இம்முகாம்களின் வா யிலாக நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சினை சரிபார்ப்பு, சிலிறி அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை மற்றும் கருப்பை மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள், கால்நடைகள் பராமரிப்பு மற்றும் முறையாக வழங்கப்பட வேண்டிய உணவு முறைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படுகிறது.

மேலும், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு குழுவினரால் முகாம் நடைபெறும் இட த்திலேயே, நோயுற்ற கால்நடைகளிடமிருந்து ஆய்வுக்கான மாதிரி பொருட்கள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டு துல்லியமான சிகிச்சை உடனடியாக வழங்கப்படுகிறது. மேலும், பல்வேறு வகையான கால்நடைகளை, நோய் வரும் முன் காத்தல் போன்ற நடவடிக்கைகள் குறித்த விளக்க கண்காட்சியும் இம்முகாம்களில் நடத்தப்பட்டு கால்நடை வளர் போருக்கு அவைகள் தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டு விழிப்பு ணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இம்முகாம்கள் தொலைதூர கிராமங்களில் நடத்தப்ப டுவதால், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ சேவைகள், மாவட்டத்தின் கடைக்கோடி கிராமப் பகுதிகளிலும் இருக்கின்ற கால்நடைகளுக்கு கிடைக்கப்பெறுகின்றன. நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு நடைமுறைகள் தொடர்பான அறிவை பகிர்வதன் மூலம் கால்ந டைகளின் கருத்தரிக்கும் திறன் மற்றும் கன்று ஈனும் விகிதத்தை கணிசமாக மேம்படுத்திடவும், கிராம பொருளாதாரத்தை உயர்த்திடவும் வழிவகை செய்கிறது. இதனால், கால்நடை வளர்ப்போர் ஊக்குவிக்கப்பட்டு கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டுவதற்கும் வழிவகை ஏற்படுகிறது.

இதுபோன்று, மாவட்டதின் பல்வேறு கிராமப்புற பகுதிகளில் நடைபெறும், சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை, விவசாயப் பெருமக்கள் பயன்படுத்திக் கொண்டு, தங்களின் கால்நடைகளை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைப் பராமரிப் புத்துறையின் சார்பில் கன்று பேரணி நடத்தப்பட்டு சிறந்த கிடேரிக்கன்றுகளை வளர்த்த 05 விவசாயிகளுக்கு பரிசுப்பொருட்களையும், சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளைப் பின்பற்றும் 05 விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை மேலாண்மை மக்கான கேடயத்தினையும், 30 விவசாயிகளுக்கு தாது உப்பு கலவையும் கூட்டுறவுத்துறை அமைச்சர் வழங்கினார்.

முன்னதாக, கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டிருந்த விளக்க கண்காட்சி மற்றும் கால்நடைக்கான சுகாதார மற்றும் விழிப்புணர் முகாமினை, கூட்டுறவுத்துறை அமைச்சர் துவக்கி வைத்து பார்வை யிட்டார்.

இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், கால்நடை பராம ரிப்புத்துறை இணை இயக்குநர் (மு.கூ.பொ) மரு.கிரிஜா, உதவி இயக்குநர் மரு.பாலசுப்பிரமணியன், கால்நடை மருத்துவர் மரு.ஜான் சுரேஷ் தாசன், கால்நடை உதவி மருத்துவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாநகராட்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சோலையழகுபுரம் பகுதியில் உள்ள வாஞ்சிநாதன் தெருவில் புதிய தார் சாலைகள் அமைப்பதற்கான பூமி பூஜை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது அருகில் மதிப்பிற்குரிய மேயர் இந்திராணி பொன்வசந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ. சங்கீதா, இ.ஆ.ப., ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் சுவிதா, மாமன்ற உறுப்பினர்கள் காவேரி, .ரவி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்



தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்துக்கு உட்பட்ட 54, 55 ஆகிய வார்டுகளில்

## 3 கோடியே 30 லட்சம் மதிப்பில் புதிய தார் சாலை அமைக்க பணியினை மண்டல குழு தலைவர் காமராஜர் துவக்கி வைத்தார்

தாம்பரம், ஜூன்.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டலத்துக்கு உட்பட்ட சமத்துவ பெரியார் நகரில் 54,55வது வார்டு பகுதியில் சாலை அமைத்து தர பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் 3 கோடி 30 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து 25 தார் சாலைகள் அமைக்கும் பணிகளை தாம்பரம் மாநகராட்சி நான்காவது மண்டல குழு தலைவர் காமராஜர் அவர்கள் துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து நடைபெற்று வரும் சாலை சீரமைக்கும் பணிகளை தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் பாலசந்தர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்த நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் புகழேந்தி, பேச்சாளர் கருணாகரன், கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள் உள்ளார்




சிவகங்கை மற்றும் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

## ரூ.21 .74 கோடி மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்

மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, ஜூன்.13-

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்திலிருந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், பல்வேறு மாவட்டங்களில் புதிய திட்டப் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள்.

அதில், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:11 பகுதியில் ரூ.0.72 கோடி மதிப்பீட்டில் சாத்தப்பர் ஊரணி புனரமைக்கும் பணிக்கும், அதேபோன்று, தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.8.21 கோடி மதிப்பீட்டில் புதிய தினசரி சந்தை அமைக்கும் பணி மற்றும் ரூ.12.81 கோடி மதிப்பீட்டில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அமைக்கும் பணி என சிவகங்கை மற்றும் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.21 .74 கோடி மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள், நகர்மன்றத் தலைவர்கள் திரு.சி.எம்.துரை ஆனந்த் (சிவகங்கை), திரு.சுந்தரலிங்கம் (தேவகோட்டை), தேவகோட்டை நகர்மன்ற துணைத்தலைவர் திரு.ரமேஷ், சிவகங்கை நகராட்சி பொறியாளர் திரு.முத்து, நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தட்கல் திட்டத்தில் மாற்றம்



தட்கல் ரயில் டிக்கெட்டுகளின் பலனை சாதாரண மக்களும் தனிநபர்களும் பெறுவதை உறுதி செய்வதற்காக, இந்திய ரயில்வே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

டிக்கெட் முன்பதிவுக்கு பாட் மென்பொருளைப் பயன்படுத்தியதற்காக கடந்த ஆறு மாதங்களில் 2.5 கோடி சந்தேகத்திற்கிடமான IRCTC ஐடிகள் தடுக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பயனர்களுக்கு தட்கல் மின்டிக்கெட் முன்பதிவு செய்ய ஆதார் அவசியம்.

ரயில்வே கவுண்டர்/ ஜன்னல் டிக்கெட்டில் தட்கல் முன்பதிவு செய்ய பயணிகள்/ பிரதிநிதிகள் மொபைல் எண் மற்றும் OTP ஐ வழங்க வேண்டும். மொபைல்/OTP வெற்றிகரமாக அங்கீகரிக்கப்பட்ட பிறகு, தட்கல் டிக்கெட் உருவாக்கப்படும்.

தட்கல் டிக்கெட் முன்பதிவுக்கான முதல் 30 நிமிடங்கள் தனிப்பட்ட ஆன்லைன் பயனர்களுக்கும், நிலையங்களில் உள்ள PRS கவுண்டர்களில் இருந்து டிக்கெட் முன்பதிவு செய்பவர்களுக்கும் மட்டுமே கிடைக்கும்.

பயண முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் அரை மணி நேரத்திற்குப் பிறகு டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம், அதாவது பயண முகவர்கள் ஏசி வகுப்புகளில் காலை 10:30 மணி முதல் மற்றும் ஏசி அல்லாதவர்களுக்கு 11:30 மணிக்குப் பிறகு தட்கல் முன்பதிவு செய்யலாம்.

தனிப்பட்ட ஆன்லைன் பயனர் மற்றும் சாளர டிக்கெட் பயனர்களுக்கு ஏசி வகுப்புகளுக்கு காலை 10:00 முதல் 10:30 வரை மற்றும் ஏசி அல்லாதவர்களுக்கு காலை 11:00 11:30 மணி வரை பிரத்யேக வசதிகள்.

ஆதார் அல்லாத பயனர்களுக்கு, PRS கவுண்டர்களிலும் அங்கீகரிக்கப்பட்ட பயண முகவர்கள் மூலமாகவும் தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்யலாம்.

ஆதார் மூலம் மின்டிக்கெட்

தட்கலுக்கான IRCTC செயலியில் டிக்கெட் முன்பதிவு செய்வது ஆதார் சரிபார்க்கப்பட்ட கணக்குகளுக்கு 01-07-2025 முதல் மட்டுமே அனுமதிக்கப்படும்.

ஆதார் அங்கீகாரத்திற்கான OTP வழங்கல் 15-07-2025 முதல் செயல்படுத்தப்படும்.

உண்மையான பயனர்களை விட பாட்கள் (அல்லது பிற மென்பொருள்கள்) வேகமாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியாது என்பதை உறுதி செய்ய சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மொபைல் OTP மூலம் விண்டோ டிக்கெட் முன்பதிவு

விண்டோ டிக்கெட்டுகளை முன்பதிவு செய்பவர் ஒரு மொபைல் எண்ணை வழங்க வேண்டும், அதற்கு OTP சரிபார்ப்புக்காக அனுப்பப்படும். இந்த ஏற்பாடு 15072025 முதல் செயல்படுத்தப்படும்.



## தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தின் சார்பாக காரைக்குடிக்கு புதிதாக மூன்று பேருந்துகள்

வகங்கை, ஜூன்.13-

சிவகங்கை மாவட்டம் கரைக்குடிக்கு தமிழக அரசின், போக்குவரத்து கழகத்தின் சார்பாக வழங்கப்பட்ட புதிய மூன்று பேருந்துகளை (பேருந்து எண் 1,1A, 9), சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புதிய பேருந்து நிலையத்திலிருந்து காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ் மாங்குடி, காரைக்குடி மாநகர மேயர் சே.முத்து துரை ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் மாமன்ற உறுப்பினர்கள் திருமதி கலா காசிநாதன், தனம் சிங்கமுத்து,திருமதி அமுதா, மாவட்ட வழக்கறிஞர் அணி பாலசுப்பிரமணியன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் SMK. சொக்கலிங்கம், மற்றும் போக்குவரத்து கழக ஊழியர்கள், திமுக மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நியாய விலை கடை விற்பனையாளர் காலி பணியிடங்களுக்கு நேர்முக தேர்வு



சென்னை, ஜூன்.13-

கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் நேற்று வெளியிட்டு அறிவிப்பு: சென்னை மாவட்டத்தில் செயல்படும் நியாய விலை கடைகளில் உள்ள விற்பனையாளர்கள் காலி பணியிடங்களை நிரப்புவதற்கு, சென்னை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளம் வழி விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு 11.6.2025 முதல் 14.7.2025 முடிய மாதவரம் பால்பண்ணை காலனி, விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தில் நேர்முக தேர்வு நடந்து வருகிறது.

இணையவழி விண்ணப்பித்துள்ளோர் www.drbchn.in என்ற இணையதள முகவரியில் தங்களது நேர்முக தேர்வு அனுமதி சீட்டை பதிவிறக்கம் செய்து தங்களுக்கு குறிப்பிட்டுள்ள நாளில் நேர்முக தேர்வில் கலந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மன்றத்திற்கு உட்பட்ட 61வது வார்டு அதை சுற்றியுள்ள தெருக்களில் டியூரிப் நிதியிலிருந்து 1கோடியை 45 லட்சம் செலவில் தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் பூஜை போட்டு துவங்கி வைத்தார் இதில் மாமன்ற உறுப்பினர் ஹேமாவதி சேகர், வட்ட கழக நிர்வாகிகள் கழகப் பேச்சாளரும் முன்னாள் மாவட்ட பிரதி நிதி எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், 33வது வட்ட செயலாளர் வினோத் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்



## அரியக்குடி தென் திருப்பதி என்று அழைக்கப்படும் திருவேங்கடமுடையான் தேர் திருவிழா வெகு

சிவகங்கை, ஜூன்.13-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே அரியக்குடி தென் திருப்பதி என்று அழைக்கப்படும் திருவேங்கடமுடையான் தேர் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அரியக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பொதுமக்கள், மற்றும் பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து, பெருமாளின் அருள் பெற்றுச் சென்றனர்.

குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை

## முதன்மை மாவட்ட நீதிபதி சொர்ணம் ஜே.நடராஜன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தொடங்கி வைத்தார்




தேனி, ஜூன்.13-

தேனி காமராஜர் பேருந்து முனையத்தில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை முதன்மை மாவட்ட நீதிபதி சொர்ணம் ஜே.நடராஜன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்கள்.

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் உலகம் முழுவதும் ஜுன் 12 அன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் உடல் மற்றும் மனரீதியான பிரச்சனைகள் குறித்து பொதுமக்களிடையே எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு பணிகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்க பிரச்சாரத்தினை முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்கள்.

பின்னர், குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு உறுதிமொழியினை முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அமர்வு நீதிபதிகள் திருமதி அனுராதா, திரு.கணேசன், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் திரு.சரவணக்குமார், சார்பு நீதிபதி / செயலாளர் பரமேஸ்வரி, சார்பு நீதிபதி கீதா, மாவட்ட உரிமையியல் நீதிபதி திரு.அலெக்ஸ்ராஜ், நீதித்துறை நடுவர்கள் ஜெயமணி, திரு.ஆசைமருது, திருமதி ஜெயபாரதி, தொழிலாளர் நல உதவி ஆணையர் திரு.மனுஜ் சியாம் சங்கர், மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் மதுரை**

**ந.க.எண் E3424093/2025/G**

அறிவிப்பு

மதுரை மாவட்டம் மேற்கு வட்டம் கோச்சடை கிராமத்தில் வசிக்கும் செந்தில்குமார் என்பவரின் தகப்பனார் சந்திரா க/பெ லெட்சுமணன் என்பவர் கடந்த 22 /02/2023 ம் தேதி மேற்கு வட்டம் கோச்சடை கிராமத்தில் இறந்துவிட்டார் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை இந்த இறப்பினை பதிவு செய்ய கேட்டு மதுரை வருவாய் கோட்டாட்சியரிடம் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளேன் மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக யாருக்கு எனும் ஆச்சரியப்பட இருந்தால் இந்த அறிவிப்பு செய்த 30 தினங்களுக்குள் மதுரை வருவாய் கோட்டாட்சியரிடம் ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம் அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரபெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிட்டு உள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரி உள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மனுதாரர், செந்தில்குமார்**

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161